ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2449/74 - 2025 අගෝස්තු මස 16 වැනි සෙනසුරාදා - 2025.08.16

2449/74 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: KDS/KGK/4/9/2017/1/LA.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/11/2016/UD/521.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத்சதர கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கடுகெலே (255) கிராம அலுவலர் பிரிவில், பஹிரவகந்தை, பிரிவு இல. 18 - கடுகெலே (கண்டி மா நகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்திற்குப் பதிலாக கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2025.05.29 ஆந் திகதி முதற் சுவட்டு வரைபட இலக்கம் மஹ 6891 இல் துண்டு இல. 03 இல் பரப்பின் ஹெக்டயார் 0.0023 விஸ்தீரணமுடைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டின் விபரங்கள்:

1. துண்டு இல. 03

காணியின் பெயர்: மதிப்பீட்டு வரி இல. 274/4; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சீ. கே. ஜே. எஸ். கருணாரத்ன மற்றும் வேறு நபர்கள்; விஸ்தீரணம்: 0.0023 ஹெக்டயார்

மேற்குறிப்பிடப்பட்ட காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மு.ப. 10.00 மணிக்கு கண்டி கடவத்சதர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். எம். யு. பி. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சதர
கங்கவட்டகோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சதர
கங்கவட்டகோரளை,
2025, யூலை 30.

EOG 08 - 0185